**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – கல்வி – விடுதிகள் – விழுப்புரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள 16 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு **ரூ. 186.71 இலட்சம் மதிப்பீட்டில்** சுற்றுச்சுவர் கட்டுதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (**நிலை**) எண்: 10

**நாள் : 06.02.2019**
விளம்பி வருடம்
தை திங்கள் 23–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரது கடித எண். த3/14867/2018, நாள். 14.09.2018.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மதிப்பீட்டுக் குழு கூட்டத்தில் சுற்றுச் சுவர் இல்லாமல் இருக்கும் விடுதிக் கட்டடங்களுக்கு உடனடியாக சுற்றுச் சுவர் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தியதன் பொருட்டு, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 16 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு சுற்றுச்சுவர் இல்லாமல் இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்து இணைத்து அனுப்பி மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி சுற்றுச் சுவர் கட்ட நிர்வாக அனுமதி அளித்தும், ரூ.201.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை பிறப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசிடம் கேட்டுக் கொண்டார்.

2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப் பின்னர், கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 16 பணிகளுக்கு **ரூ.1,86,71,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தாறு இலட்சத்து எழுபத்து ஓராயிரம் மட்டும்)** ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்தும், நிதி ஒப்புதல் வழங்கியும் அரசு ஆணையிடுகிறது :-

| **வ. எண்.** | **சுற்றுச்சுவர் கட்ட இருக்கும் விடுதியின் பெயர்** | **நிதி ஒப்பளிப்பு செய்யப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, பெருமங்கலம், விழுப்புரம் மாவட்டம் | 7.81 |
| 2. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, விருகாவூர், விழுப்புரம் மாவட்டம் | 8.31 |
| 3. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, செவலப்புரை, விழுப்புரம் மாவட்டம் | 8.93 |

**(த.பி.பா.)**

| | | |
|---|---|---|
| 4. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் | 8.79 |
| 5. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, சேப்பாக்கம், கடலூர் மாவட்டம் | 8.83 |
| 6. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, மங்கலம் பேட்டை, கடலூர் மாவட்டம் | 8.74 |
| 7. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம் | 11.08 |
| 8. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, காட்டுமன்னார் கோவில், கடலூர் மாவட்டம் | 11.07 |
| 9. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, காட்டுமன்னார் கோவில், கடலூர் மாவட்டம் | 14.75 |
| 10. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, மேலவன்னியூர், கடலூர் மாவட்டம் | 13.25 |
| 11. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | 14.74 |
| 12. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி, ச.முட்லூர், கடலூர் மாவட்டம் | 9.34 |
| 13. | ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதி, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | 13.24 |
| 14. | ஆதிதிராவிடர் நல முதுகலை கல்லூரி மாணவர் விடுதி, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | 9.21 |
| 15. | ஆதிதிராவிடர் நல தொழிற்பயிற்சி மாணவர் விடுதி, சிதம்பரம், கடலூர் மாவட்டம் | 8.80 |
| 16. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டம் | 29.82 |
| | **மொத்தம்** | **186.71** |

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"4225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள், JA – ஆதிதிராவிடர் மாணவரில்லங்கள் கட்டுதல்–16 பெரும் பணிகள் (த.தொ.கு .4225 01 277 JA 1603)"

(த.பி.பா.)

4. மேலே பத்தி– 2 இல் அனுமதிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் 2018–2019–ஆம் ஆண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2018–2019–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்ட மன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிநோக்கி மேலே பத்தி 2–இல் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 2–இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2018–2019–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதித் (ஆதி(ம)பந. / வ.செ.பொ–1) துறைக்கு அனுப்பிவைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணி, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), சென்னை நிறுவனத்தால் உரிய ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கட்டுமானப் பணி தாட்கோ மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று தாட்கோ நிறுவனத்திற்கு பணமாக வழங்காமல், தாட்கோ நிறுவனத்தின் கீழ்க்காணும் அலுவலர் பெயர் வைப்புத் தொகை கணக்குத் தலைப்பில் காசோலை / வரைவோலை மூலம் எதிர் வரவாக (Contra credit) வரவு வைப்பதற்கு ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்து அதிகாரம் வழங்கப்படுகிறது.

"K வைப்புத்தொகைகள் மற்றும் முன்பணங்கள் (b) வட்டியில்லா வைப்புத் தொகைகள் 8443–00– உரிமையியல் வைப்புத் தொகைகள் 800 பிற வைப்புத்தொகைகள் – BY தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வளர்ச்சி கழக வைப்புத்தொகைகள் – தாட்கோவின் வைப்புத் தொகைகள் "

(த.தொ.கு. 8443 00 800 BY 000G) (Receipt)

(த.தொ.கு 8443 00 800 BY 0004) (Outgo)".

7. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படி, ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணி முன்னேற்றத்தினை கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கட்டடங்கள் கட்டிமுடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தொடர்பான பணி முன்னேற்ற அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும், கட்டுமானப்பணியின் விரைவு மற்றும் அதன் தரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ, மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(த.பி.பா.)

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.1948/ஆதி(ம)பந/2019, நாள்.05.02.2019-இல் பெறப்பட்ட ஒப்புதல் மற்றும் கூடுதல் பேரேட்டு எண்.2635 (இரண்டாயிரத்து அறுநூற்று முப்பத்து ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஒட்டெம் டாய்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:**
ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர்.
மாவட்ட கரூவூல அலுவலர், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர்.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதித் (ஆதி(ம)பந/வ.செ.பொது.I) துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ஆதிந.5 ) துறை, சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

7/2/2019
**பிரிவு அலுவலர்**